






## தரம் 10, 11 மாணவர்களுக்கான,

# "நீதிப்பாடல்கள்"








# தமிழ் மொழியும் இலக்கியமும்.










தொகுப்பு..

ஆசிரியர்: திரு. இ. அநூஷன் [National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)




## நீதி நூல்கள்

**இவ்வுலக வாழ்க்கையில் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் பற்றி எடுத்துரைக்கும் நூல்கள்** நீதி, அறம் நூல்கள் அல்லது கீழ்க்கணக்கு என்று அழைக்கப்படுகின்றன. இலக்கண நூல்களாகி **தொல்காப்பியம், பன்னிரு பாட்டியல்** போன்றன இவற்றுக்கான இலக்கணத்தைத் தருகின்றன. தொல்காப்பியம் தரும் இலக்கணம்,

"வனப்பியல் தானே வகுக்குங்காலைச்
சின்மென் மொழியால் தூய பனுவலொடு
அம்மை தானே அடிநிமிர்பு இன்றே"

இதனுள் வந்துள்ள "**தூய பனுவலொடு**" என்ற அடையுடன் கூடிய பகுதி **அறம், பொருள், இன்பமென்னும் முன்றிற்கும் இலக்கணம் கூற வந்த நூல்களைப் பற்றி**யதாகும். வனப்பு அடிப்படை சார்ந்த அம்மை பற்றித் தொல்காப்பியர் வகுத்துக் கூறும் பொழுது, **சிலவாகிய மெல்லியவாகிய மொழியினால் தொகுக்கப்பெற்ற அடிகள் மிகுதியில்லாமல் வரும் செய்யுட்கள் அம்மையாகும்** என்கிறார். தொல்காப்பியர் கூறும் **"அம்மை"** எனும் வனப்பில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இடம் பெறுகின்றன. இவ்விலக்கணமே தொல் காப்பிய அடிப்படையில் நீதி நூல்களுக்கானது ஆகும்.



எனவே **நீதி நூல்கள் அடி அளவில் மிகுதிப்படாமல் இருக்க வேண்டும்** என்ற வடிவ வரையறை **தொல்காப்பிய** அடிப்படையில் கிடைத்ததாகும். இது கருதியே அடியளவில் சுருங்கியதாகவே நீதி நூல்களின் பாடல்கள் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

**அறம், பொருள், இன்பம்** என்னும் மூன்றையோ அல்லது **அவற்றில் ஒன்றையோ ஐந்து அல்லது அதனினும் குறைந்த அடிகளில் வெண்பா யாப்பில்** கூறுவன கீழ்க்கணக்கு நூல்களாகும். இவ்விலக்கணம் நீதி நூல்களுக்குப் பொருந்துவதாகும். இதன் காரணமாகவே **வெண்பா யாப்பு** நீதி நூல்களுக்கு உரியதானது. குறிப்பாக **ஓரடி, ஈரடி, நான்கடி** என்று **சுருங்கிய அளவில் நீதிக் கருத்துக்களை எடுத்துரைக்கும் போக்கு நீதி நூல்களில்** காணப்படுகிறது.

**நீதி கூறுகையில் அது சுருங்கிய அளவில்** இருக்க வேண்டும் என்று தமிழ்ப் படைப்பாளர்கள் எண்ணியுள்ளனர். மேலும் **வாழ்க்கைக்குச் சட்டமாக அமையும் நீதி நூல்கள் விரிவான அடிவரையறை பெற்றனவாக இருந்தால் அதனுள் பல குழப்பங்கள் நேரும்** என்பது கருதியும் இந்தச் சுருக்கமான அடி வரையறை நீதி நூல்கள் எழுதுபவர்களால் பின்பற்றப் பெற்றுள்ளது. தமிழ்ப் பரப்பில் தொடர்ந்து வந்த நீதி நூல்களிலும் இந்தச் சுருக்கமான அடிவரையறை என்ற கட்டமைப்பு பின்பற்றப் பெற்றுள்ளது. இதனை அறிந்துணர நீதி நூல்களின் அடி அளவு குறித்த செய்திகளைத் தொகுத்துக் காண வேண்டியுள்ளது.






## விவேக சிந்தாமணி

விவேக சிந்தாமணி என்பது ஒரு பழைமையான தமிழ் நூலாகும். இது **அனுபவ முதுரைகளைக் கொண்ட தமிழ் செய்யுள் தொகுப்பா**கும். இந்த **நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியாது. எந்த காலத்தில் இயற்றப்பட்ட நூல் என்பதும் தெரியாது**. அதுபோல் பாடல்களை இயற்றியவர், பாடல் எழுந்த சூழலைக் குறிப்பிடவில்லை. ஆனால் இதுவரை **இருநூற்றுக்கும் மேற்பட்ட பதிப்பு**களைக் கண்டுள்ள இந்நூல் **கற்றவரிடத்தும் சாதாரண மக்களிடத்தும் மிகுந்த செல்வாக்கைப் பெற்று**ள்ளது. **நாயக்கர் காலத்தில் இந்த நூல் உருவாகியிருக்கலாம்** என்று ஒரு சிலர் கூறுகின்றனர். இந்நூலில் சிந்தனைக்குகந்த, பொருள் பொதிந்த வார்த்தைகளால் நீதிகளும், அழகியலும் செய்யுள் நடையில் சொல்லப்பட்டு இருக்கும். **தனிப்பாடல்களாக இருந்த பாடல்களைத் தொகுத்து இந்த நூல் உருவானது என்ற அனுமானமும்** உண்டு.

சிந்தாமணி என்னும் பெயர் வரக்கூடியதாய்ப் பல நூல்கள் தமிழில் இருந்ததால் இது விவேக சிந்தாமணி ஆயிற்று. இதில் கடவுள் வாழ்த்துடன் 135 பாடல்கள் உள்ளன. நீதிக்கருத்துப் பாடல்களே இவற்றுள் அதிகம். நான்கு வெண்பாக்கள், சில கட்டளைக் கலித்துறைகள், பல ஆசிரிய விருத்தங்கள் இவற்றில் உள்ளன. இங்கு, விருத்தப்பாவினாலான நூலின் 9ஆம் பாடல் இடம்பெற்றுள்ளது. ‘‘புல்லர் இயல்பு’’ பற்றிய இப்பாடல் நீதிக்கருத்தைக் கூறுவதாகும்.

### பாடல் 01

**‘‘தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்**

**நுகரா மண்டுகம்**

**வண்டோ கானத் திடையிருந்து வந்து**

**கமல மதுவுண்ணும்**

பண்டே பழகியிருந்தாலும் அறியார்

புல்லர் நல்லோரைக்

அன்பென்று கொட்டு முரசே!

கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்

கலப்பர் கற்றோரே.’’

### பதப்பிரிப்பு

மண்டுகம் - தண் தாமரையின் உடன் பிறந்தும் தன் தேன் நுகரா

.................................................................................................................................

வண்டோ கானகத்து இடை இருந்து வந்து

.................................................................................................................................

கமல மது உண்ணும்

.................................................................................................................................

பண்டு பழகி இருந்தாலும்

………………………………………………………………………………………………………

புல்லர் நல்லோரை அறியார்

………………………………………………………………………………………………………

கற்றோர் அங்கு கண்டு களித்து உறவு ஆடி

………………………………………………………………………………………………………

தம்மின் கலப்பர்

………………………………………………………………………………………………………

## வெற்றிவேற்கை.




வெற்றி வேற்கை (**நறுந்தொகை**) எனும் நூலின் ஆசிரியர் **அதிவீர ராம பாண்டியன்.** இவர் தமிழ்ப் புலவரும், **கொற்கை நகரத்து அர**சருமாவார். இது ஒரு முத்து குளிக்குமிடம், துறைமுகம். **நைடதம், லிங்கபுராணம், காசிகாண்டம், வாயு ஸம்ஹிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம்** முதலியவை இவர் இயற்றிய மற்ற நூல்கள். **40 பாடல்** கொண்ட இந்நூலில் **ஒருவரிப்பாடல் தொடக்கம் பதினைந்து வரிப் பாடல்கள்** வரை உள்ளது. இற்கு **16-18** வரையான பாடல்கள் இங்கு அமைந்துள்ளது. நல்ல தமிழினால் ஆன இந்த நறுந்தொகையினால் தம் **குற்றங்களை நீக்கிக் கொள்வோர் குறைவில்லாத வாழ்வார்களாக.**

### பாடல் 02

"தேம்படுபனையின் றிரள்பழத்திதொருவிதை
வானுறவோங்கி வளம்பெ றவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே
**தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை**
**தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்**
**நுண்ணியதே**யாயினும் அண்ணல்யானை
அணிதேர்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே
அதனால்,
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம் சிறியருமல்லர்"

## பதப்பிரிப்பு

பனையின் தேம்படு திரள் பழத்து ஒரு விதை

…………………………………………………………………………………………………………

வான் உற ஓங்கி வளம்பெற வளரினும்

…………………………………………………………………………………………………………

ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாது

…………………………………………………………………………………………………………

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை

…………………………………………………………………………………………………………

தெண் நீர் கயத்து சிறு மீன் சினையிலும்

…………………………………………………………………………………………………………

நுண்ணியதே ஆயினும் அண்ணல் யானை

…………………………………………………………………………………………………………

அணி தேர் புரவியாட் பெரும் படையோடு

…………………………………………………………………………………………………………

மன்னருக்கு இருக்க நிழல் ஆகுமே

…………………………………………………………………………………………………………

அதனால்

…………………………………………………………………………………………………………

பெரியோர் எல்லாம் பெரியோர் அல்லர்

…………………………………………………………………………………………………………

சிறியோர் எல்லாம் சிறியோர் அல்லர்

…………………………………………………………………………………………………………

## வாக்குண்டாம்.




மூதுரை **ஒளவையார்** இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். ஒளவை என்பதற்கு **முதியவள், தாய், தமக்கை** எனப் பொருளுண்டு. **பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை (மூப்பு - உரை)** என அழைக்கப்படுகிறது. இதற்கு **வாக்குண்டாம்** என்ற இன்னொரு பெயரும் உண்டு. **இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் "வாக்குண்டாம்" என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது.** இந்நூலில் **30 வெண்பாப்** பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒரு தனிக்கருத்தை வலியுறுத்துகிறது. இங்கு இடம்பெறும் பாடல் **16வது** பாடலாகும்.

### பாடல் 03

"அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்

கடக்கக் கருதவும் வேண்டா – **மடைத்தலையில்**

**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**

**வாடியிருக்குமாம் கொக்கு**"

### பதப்பிரிப்பு

கொக்கு மடைத்தலையில்

……………………………………………………………………………………………………

ஓடும் மீன் ஓட உறுமீன் வரும் அளவும் வாடியிருக்கும்

……………………………………………………………………………………………………


அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணி

……………………………………………………………………………………………………

கடக்க கருதவும் வேண்டா

……………………………………………………………………………………………………

### திரிகடுகம்.




திரிகடுகம் என்பது **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.** இந்நூல் **நல்லாதனார்** என்னும் புலவரால் இயற்றப்பட்டதாகும். **திரிகடுகம் என்பது மூன்று மருந்துப் பொருட்களைக் குறிக்கும். சுக்கு, மிளகு, திப்பிலி** என்னும் **மூலிகைகள் உடலுக்கு நன்மை செய்வது போல் இதிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறப்பட்டுள்ள மூன்று நீதிகள் மனிதனின் அறியாமையாகிய நோயைப் போக்கி, வாழ்க்கை செம்மை பெற உதவுமென்ற கருத்தமைந்தமையால் இந்நூல் திரிகடுகம் எனப்படுகிறது. 101 வெண்பாக்களைக்** கொண்டது இந்நூல். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் **கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.** இதன் ஒவ்வொரு பாடலிலும் **இம்மூவர் அல்லது இம்மூன்றும்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு இடம்பெறும் பாடல் **10ஆவது** பாடலாகும்.

### பாடல் 04

"கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு

மூத்தோரை யில்லா வவைக்களனும் - பாத்துண்ணுந்

தன்மையிலாள ரயலிருப்பு **மிம்மூன்றும்**

**நன்மை பயத்த லில**"

**பதப்பிரிப்பு**

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்

……………………………………………………………………………………………………………

மூத்தோரை இல்லா அவைக்களனும் - பார்த்து உண்ணும்

……………………………………………………………………………………………………………

தன்மை இலாளர் அயல் இருப்பு இம் மூன்றும்

……………………………………………………………………………………………………………

நன்மை பயத்தல் இல

……………………………………………………………………………………………………………

## முதுமொழி வெண்பா



இந்நூல் இலங்கையின் **அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மருதமுனைக்** கிராமத்தை வாழ்விடமாகக் கொண்ட **புலவர்மணி அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்**(04.05.1909-16.11.2000) அவர்கள் இயற்றியது. இவர்கள் **சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மாணவராகவும், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் நண்பராகவும்** விளங்கியவர். ஆசிரியராக, அதிபராக, வட்டாரக்கல்வி அதிகாரியாக, பாடநூல் பகுதி எழுத்தாளராக, கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆலோசகராக அரச துறையில் பணியாற்றியவர்.

உமறுப்புலவரின் புதுக்குஷ்ஷாம் என்னும் நூலின் **பதுறு படலத்துக்கான உரை, நபி மொழி நாற்பது, வீராங்கனை சாஹிதா, முதுமொழி வெண்பா, உலகியல் விளக்கமும் நம் நாட்டின் நானிலம் காட்சிகளும், கனிந்தகாதல், சூறாவளி படைப்போர், ஷரிபுத்தீன் செய்த தமிழ்** ஆகிய நூல்களின் ஆசிரியர். தீவிரமான தமிழ் மொழி பற்றாளர். இவரது **முதுமொழி வெண்பா நூலில் ஒவ்வொரு வெண்பாவின் இறுதி அடியிலும் ஒவ்வோர் முதுமொழி கூறப்பட்டுள்ளதுடன், ஏனைய மூன்று அடிகளிலும் அதனை அணிசெய்யும் உதாரணங்கள் கையாளப்**பட்டுள்ளன. இந்நூலில் **45 தலைப்புக்களின் கீழான 219 வெண்பா**க்கள் அடங்கியுள்ளன. அதில் **"உள்ளம்"** எனும் முதலாவது தலைப்பின் கீழ்வரும் இரண்டாவது பாடல் இங்கு தரப்பட்டுள்ளது. பாடல் **05ஆவது** பாடலாகும்.

"உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்

தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்

பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்

**மனங்கொண் டதுமா ளிகை**"

**பதப்பிரிப்பு**

உப்பு இலா கஞ்சியினை உண்ணும் அறு சுவை போல்

……………………………………………………………………………………………………

தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - ஒப்பும்

……………………………………………………………………………………………………

பனை ஓலை பாயில் படுத்துறங்கும் வாழ்வார்

……………………………………………………………………………………………………

மனம் கொண்டது மாளிகை

……………………………………………………………………………………………………

**நாலடியார்.**




நாலடியார் **பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல்.** இது **நான்கு அடிகளைக் கொண்ட வெண்பா**க்களால் ஆனது. இது **சமண முனிவர்களால்** இயற்றப்பட்ட **நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாக**க் கருதப்படுகிறது. இதனால் இது **நாலடி நானூறு** எனவும் பெயர் பெறும். **"வேளாண் வேதம்"** என்ற பெயரும் உண்டு. பல நேரங்களில் இது புகழ் பெற்ற தமிழ் நீதி நூலான **திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்று**ள்ளது. **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார்** ஆகும். இந்நூல் **முத்தரையர்** எனும் பிரிவினைப் பற்றி கூறும் நூல் ஆகும். **வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம்** பெற்று விளங்குகிறது. இந்நூலினை **ஆங்கிலத்தில் ஜி.யூ.போப் மொழி பெயர்த்து**ள்ளார்.

**400 வெண்பா**க்கள் தொகுக்கப்பட்டு இந்நூல் உருவானது. இதனைத் **தொகுத்தவரும், முதன் முதலில் உரை எழுதியவரும் பதுமனார்** எனும் புலவராவார். இந் நூல் திருக்குறளைப்போலவே **அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்** எனப் பாகுபடுத்தப்பட்டு, கடவுள் வாழ்த்துடன் **ஒவ்வொரு அதிகாரமும் பத்துப்பத்து வெண்பாக்கள் கொண்ட நாற்பது அதிகாரங்களாக வகுக்க**ப்பட்டுள்ளது பொருட்பாலிலுள்ள **"நட்பாராய்தல்"** என்னும் அதிகாரத்தில் அமைந்த **213**ஆம் பாடல் இங்கு தரப்பட்டுள்ளது.

**பாடல் 06**

"**யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்**
**கேண்மை கொழீஇக் கொளல்வேண்டும்** - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்"

## பதப்பிரிப்பு

யானை அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும்

………………………………………………………………………………………………

எறிந்த வேல் மெய் தாவால் குழைக்கும் நாய்

………………………………………………………………………………………………

யானை அனையவர் நண்பொரீ, நாய் அனையார்

………………………………………………………………………………………………

கேண்மை கொழீ, கொளல் வேண்டும்

………………………………………………………………………………………………

## இனியவை நாற்பது.

இனியவை நாற்பதின் பாடல்களும் **வெண்பா யாப்பில் அமைந்த நான்கு அடிகளால் ஆனது** ஆகும். ஆசிரியர் **பூதஞ்சேந்தனார்**. இந் நூல் **நாற்பத்தியொரு வெண்பா**க்களைக் கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்தில் **சிவன், திருமால், நான்முகன்** ஆகிய மூவரும் வணங்கப்படுகின்றனர். இவற்றில் எல்லாம் **முன் இரண்டு அடிகளில் இரு பொருள்களும், பின் இரண்டு அடிகளில் ஒரு பொருளுமாக அமைந்துள்ளமை கவனிக்கத் தக்கது. வாழ்க்கையில் நன்மை தரும் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து “இனிது“ என்ற தலைப்பிட்டு அமைத்திருப்பதால் இ∴து “இனியவை நாற்பது”** எனப்பட்டது. இங்கு இடம்பெறும் பாடல் **15ஆவது** பாடலாகும்.




### பாடல் 07

“கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துனையும் ஆற்றல் இனிது”

அன்பென்று கொட்டு முரசே!

## பதப்பிரிப்பு

கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே

………………………………………………………………………………………………

மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே

………………………………………………………………………………………………

எத்துணை யானும் இரவாது தான் ஈதல்

………………………………………………………………………………………………

எத்துனையும் ஆற்றல் இனி

………………………………………………………………………………………………

**1. விவேகசிந்தாமணி.**

(அ) மண்டுகத்தின் இயல்பு : தாமரையுடன் வாழ்ந்தும் அதன் மலரிலுள்ள தேனைக் குடிக்கவியலா அறியாமை கொண்டிருத்தல்

(ஆ) வண்டுகளின் இயல்பு : காட்டில் வாழ்ந்தாலும் தாமரை மலரின் தேனை உண்ணக்கூடிய அறிவுடைமை கொண்டிருத்தல்

(இ) அறிவுடையோர் இயல்பு : கற்றோரைக் கண்டவுடன் புரிந்து கொண்டு நட்புடன் மகிழ்ந்துறவாடும் தன்மை கொண்டிருத்தல்

(ஈ) புல்லர்களின் இயல்பு : அறிவுடையோருடன் பலநாட் பழகியிருந்தும் அவர் தம் நற்பண்புகளை புரிய முடியாத அறியாமை கொண்டிருத்தல்.

(உ) பொதுக்கருத்து : அறிவுடையோர் பயனுடையவர்கள் புல்லர்கள் பயனற்ற அறியாமையுடையவர்கள்.

**2. வெற்றிவேற்கை.**

(அ) பனைமரத்தின் இயல்பு : பெரிய கொட்டையிலிருந்து முளைத்து உயரமாக வளர்ந்திருந்தாலும், ஒருவர் இருப்பதற்கு நிழல் கொடுத்து உதவ முடியாமை.

(ஆ ஆல மரத்தின் இயல்பு : நுண்ணிய விதையிலிருந்து முளைத்து வளர்ந்தாலும் நாற்படைகளும், மன்னர்களும் தங்குவதற்கு நிழல் தந்து உதவுகின்றமை.

(இ) பொதுக்கருத்து : பிறருக்கு உதவுவதன் அடிப்படையிலேயே பெரியவர், சிறியவர் என்ற பேதம் அமையும்.

**3. வாக்குண்டாம் (மூதுரை).**

(அ) கொக்கின் இயல்பு : மடைத்தலையில் சிறிய மீன்களை ஓடவிட்டு பெரிய மீன் வரும் வரை அடக்கமாகக் காத்திருத்தல்.

(ஆ) அடக்கமுடையார் இயல்பு : தமக்கு ஏற்றவர் அல்லாதாரைத் தவிர்த்து, ஏற்ற எதிரிகள் வரும் வரை அடக்கத்துடன் காத்திருத்தல்

(இ) பொதுக்கருத்து : அடக்கமுடையோரை அறிவிலார் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது.

**4. திரிகடுகம்.**

(அ) உடலுக்கு நன்மைதரும் மருந்துப்பொருட்கள் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியன.

(ஆ) வாழ்க்கைக்கு நன்மை தராத மூன்று விடயங்கள்: ஆசிரியர் இல்லாத ஊர், மூத்தோர் இல்லா அவை, உணவைப் பகிர்ந்து கொடுத்து உண்ணுபவர்கள் இல்லாத அயல் ஆகியன..

**5. முதுமொழி வெண்பா**

(அ)குடிசையில் வாழ்ந்தாலும், கோபுர மாளிகையில் வாழ்ந்தாலும் மன நிறைவே முக்கியமானதாகும். இதனையே "மனங்கொண்டது மாளிகை" என்னும் முதுமொழி எடுத்து காட்டுகிறது.

(ஆ)மனநிறைவை எடுத்துக்காட்டும் மூன்று செயல்களாவன: உப்பிலாக் கஞ்சியை அறுசுவை போல உண்ணல், தப்பிய கந்தையை பட்டாடைபோல் அணிதல், பனையோலைப் பாயினை மேலான படுக்கையாக எண்ணி உறங்குதல்.

**6. நாலடியார்.** (அ) யானை பழியுணர்ச்சி மிக்கது பலநாட்பழகினும் பாகனையே கொல்லும். அத்தகைய குணமுடையோர் நட்பை விலக்கிவிட வேண்டும்.

(ஆ) நாய் நன்றியுள்ளது எசமான் தண்டித்தாலும் வாலை வளைத்து ஆட்டும். அதுபோன்ற குணமுடையோர் நட்பைத் தழுவிக்கொள்ள வேண்டும்.

**7. இனியவை நாற்பது**

(அ) இனிமைதரும் செயல்கள் மூன்றாவது : கற்றோர் முன் கல்வியுரைத்தல், அறிஞுரைச் சேர்தல், எந்நிலையிலும் பிறரிடம் இரவாது தான் ஈதல்.

## மாதிரிவினாக்கள்.

01. நீதிப் பாடல்கள் என்றால் என்ன?
02. நீதி நூல்கள் அதிகம் எழுந்த காலம் எது?
03. உமது பாடப்பரப்பில் இடம்பெறும் நீதி நூல்களையும், அவற்றின் ஆசிரியர்களையும் தருக.
04. நீதி நூல்களின் பொதுவான இயல்புகள் 05 தருக.
05. "**தண்டா மரையி னுடன் பிறந்தும்**..." என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
   ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?
   iii. இது எக்காலத்தில் எழுந்த நூலாகும்?
   iv. இந் நூலை பல்திரட்டு நூல் எனப் பெயர் குறிப்பிடப்படக் காரணம் யாது?
   v. இந்நூலில் காணப்படும் பாடல்கள் எத்தனை?
   vi. இந் நூல் எவ் யாப்புக்களால் பாடப்பட்டுள்ளது?
   vii. இப் பாடல் எவ் யாப்பில் பாடப்பட்டுள்ளது?
   viii. இப்பாடலில் ஆசிரியர் தன் கருத்தை வலியுறுத்த கையாண்ட எடுத்துக்காட்டுகள் எவை?
   ix. இப்பாடல் யாருடைய இயல்பு பற்றிய நீதிக் கருத்தைக் கூறுவதாகும்.
   x. இப்பாடலினை சந்தி பிரித்து எழுதுக.
   xi. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.
   xii. தடித்த எழுத்துள்ள பகுதியின் சிறப்பு யாது?
   xiii. செய்யுளில் கூறப்படும் தவளையின் இயல்பு யாது?
   xiv. செய்யுளில் கூறப்படும் வண்டின் இயல்பு யாது?
   xv. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.
   xvi. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?
   xvii. இப் பாடலில் கூறப்படும் புல்லர், கற்றோருக்கிடையிலான வேறுபாடு யாது?
06. "**தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை**..." என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
   ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?
   iii. இந் நூலின் ஆசிரியர் யார்?
   iv. இந்நூல் எக்காலத்தில் பாடப்பட்டது?
   v. இந்நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
   vi. இந்நூலாசிரியர் எழுதிய வேறு நூல்கள் எவை?

vii. இந் நூலில் உள்ள பாடல்கள் எத்தனை?

viii. இப்பாடலில் ஆசிரியர் தன் கருத்தை வலியுறுத்த கையாண்ட எடுத்துக்காட்டுகள் எவை?

ix. பனை மரத்தின் இயல்பு யாது?

x. ஆல மரத்தின் இயல்பு யாது?

xi. இப் பாடலில் கூறப்படும் நாட்படைகளும் எவை?

xii. இப்பாடலினை சந்தி பிரித்து எழுதுக.

xiii. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.

xiv. தடித்த எழுத்துள்ள பகுதியின் சிறப்பு யாது?

xv. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.

xvi. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?

xvii. மனிதரில் பெரியவர், சிறியவர் பேதம் எவற்றைக் கொண்டு கணிக்கப்படுகிறது?

07. "**அடக்கம் உடையார் அறிவிலர்**..." என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?

iii. இந் நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?

iv. இப் பாடலின் ஆசிரியர் யார்?

v. இது எக்காலத்தில் எழுந்த பாடலாகும்?

vi. இந் நூல் எத்தனை பாடல்களைக் கொண்டதாகும்.

vii. இந் நூலாசிரியரின் ஏனைய படைப்புக்கள் சில தருக.

viii. ஔவை எனும் சொல் தரும் பொருள் யாது?

ix. இப்பாடலினைச் சந்தி பிரித்து எழுதுக.

x. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.

xi. இப் பாடலில் குறிப்பிடப்படும் கொக்கின் செயற்பாடு யாது?

xii. இப் பாடலில் குறிப்பிடப்படும் அடக்கமுடையாரின் செயற்பாடு யாது?

xiii. தடித்த எழுத்துள்ள பகுதியின் சிறப்பு யாது?

xiv. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.

xv. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?

08. "**கணக்காய ரில்லாத வூரும்**..." என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?

iii. இப் பாடலின் ஆசிரியர் யார்?

iv. இந் நூலில் கூறப்படும் மூன்று மூலிகைப் பொருட்களும் எவை?

v. இது எக்காலத்தில் எழுந்த பாடலாகும்?

vi. இந் நூல் எத்தனை பாடல்களைக் கொண்டதாகும்.

vii. இப்பாடலிடை சந்தி பிரித்து எழுதுக.

viii. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.
ix. இப் பாடலில் குறிப்பிடப்படும் ஒருவருக்கு நன்மைபயக்காத விடயங்கள் எவை?
x. இப்பாடலில் குறிப்பிடப்படும் பிணக்கு என்பது யாது?
xi. தடித்த எழுத்துள்ள பகுதியின் சிறப்பு யாது?
xii. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.
xiii. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?

09. "**உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு**…" என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?
iii. இப் பாடலின் ஆசிரியர் யார்?
iv. இந் நூலாசிரியரின் ஏனைய படைப்புக்களுக்கு உதாரணம் தருக.
v. இது எக்காலத்தில் எழுந்த பாடலாகும்?
vi. இந் நூல் எத்தனை பாடல்களைக் கொண்டதாகும்.
vii. இப்பாடலினை சந்தி பிரித்து எழுதுக.
viii. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.
ix. இப் பாடலில் கூறப்படும் மனநிறைவின் முக்கியத்தை வெளிப்படுத்தும் விடயங்கள் எவை?
x. தடித்த எழுத்துள்ள பகுதியின் சிறப்பு யாது?
xi. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.
xii. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?

10. "**யானை அனையவர் நண்பொரீ**…" என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?, தலைப்பு எது?
ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?
iii. இப் பாடலின் ஆசிரியர் யார்?
iv. இந் நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
v. இது எக்காலத்தில் எழுந்த பாடலாகும்?
vi. இந் நூல் எத்தனை பிரிவுகள், அதிகாரங்கள், பாடல்களைக் கொண்டது?
vii. இந் நூலில் உள்ள பிரிவுகள் எவை?
viii. இந் நூலை முதலில் தொகுத்து, உரை எழுதியவர் யார்?
ix. இப்பாடலினை சந்தி பிரித்து எழுதுக.
x. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.
xi. இப் பாடலில் கூறப்படும் நல்ல நட்பு, கெட்ட நட்பு பற்றிக் கூறுக
xii. இப் பாடலில் கூறப்படும் நாயின் குணயியல்பு யாது?
xiii. இப் பாடலில் கூறப்படும் யானையின் குணயியல்பு யாது?
xiv. தடித்த எழுத்துள்ள பகுதியின் சிறப்பு யாது?
xv. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.

xvi. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?

xvii. இப் பாடலில் இடம்பெறும் உயிரளபெடைச் சொற்களைத் தருக.

11. "**கற்றார் முன் கல்வி உரைத்தல்** ..." என்னும் பாடலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

ii. இந் நூலுக்கு மேற்குறிப்பிட்ட பெயர் வரக் காரணம் யாது?

iii. இப் பாடலின் ஆசிரியர் யார்?

iv. இது எக்காலத்தில் எழுந்த பாடலாகும்?

v. இப்பாடலிடை சந்தி பிரித்து எழுதுக.

vi. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.

vii. இப் பாடலில் கூறப்படும் இன்பம் தரும் மூன்று விடயங்களும் எவை?

viii. இப் பாடலில் கூறப்பட்டுள்ள கல்வியின் சிறப்பு யாது?

ix. இப் பாடலில் கூறப்பட்டுள்ள கொடையின் சிறப்பு யாது?

x. இப்பாடலில் நீர் காணும் மொழிநடைச்சிறப்பம்சங்களை தருக.

xi. பாடலினூடாக ஆசிரியர் வலியுறுத்த விளையும் முக்கிய விடயம் யாது?

**12. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருளைத் தருக.**

- மண்டுகம்.................................................................................................
- தண்.......................................................................................................
- புல்லர்...................................................................................................
- தேம்படு..................................................................................................
- புரவி.....................................................................................................
- தெண்ணீர்...............................................................................................
- அண்ணல்யானை........................................................................................
- அணிதேர்................................................................................................
- ஆட்பெரும்படை.........................................................................................
- மடைத்தலை.............................................................................................
- உறு.......................................................................................................
- கணக்காயர்.............................................................................................
- பிணக்கு..................................................................................................
- தப்பிய...................................................................................................
- கந்தை....................................................................................................
- பீதாம்பரம்..............................................................................................
- கேண்மை.................................................................................................
- தழீ,.......................................................................................................
- மிக்கார்..................................................................................................
- எள்துணை................................................................................................